264
1-54

# 1954 சர்வோதயபக்ஷ விசேஷ மலர்.

"செய்வோம் அல்லது மடிவோம்"

Regd. No. M 6207.

பக்கம்

# கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956
MADRAS

மலர் 2 திருப்பூர் - பிப்ரவரி 15 * 1954 * விலை 1 அணா இதழ் 8

1954 சர்வோதய மேளாவுக்கு
யோகி சுத்தானந்த பாரதியாரின்

## அன்புக் காணிக்கை

1. இந்த உலகமெல்லாம் பொதுவே
எவர்க்கும் உழைத்துண்ணல் விதியே
தந்தமெனும் அகந்தை இழிவே
சர்வோதயமே வாழும் வழியே.

2. ஒருமை ஒருமை யெனப்பாடுவோம்—ஆன்ம
உரிமை கொண்டு நலன் தேடுவோம்
பெருமை பெற நமது நாடெலாம்—மிகப்
பெரிய பணி நலத்திற் கூடுவோம்.

3. பேச்செல்லாம் செயலெனச் செய்குவோம்
பிணைப் பிரிவினையைக் கொய்குவோம்
மூச்செல்லாம் அன்பு மயமாக்குவோம்—நாடு
முன்னேறும் சக்தியினை ஊக்குவோம்.

— சுத்தானந்த பாரதி.

அகில பாரத சர்க்கா சங்க
கதரையே வாங்கி உடுத்துங்கள்.
போலி கதரை வாங்கி ஏமாறாதீர்கள்.

## "உலகம் உங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறது"

[காந்திஜியின் மறைவு நாளாகிய ஜனவரி 30-ம் தேதியில் சேவாகிராமம் காந்திஜி ஆசிரமத்திற்கு ஐக்கிய நாட்டு ஸ்தாபனத் தலைவி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் விஜயம் செய்தார். காலை பிரார்த்தனைக்குப் பிறகு தொண்டர்கள் கூட்டத்தில் அவர் பேசியதின் சுருக்கம் வருமாறு:] — ஆசிரியர்

"இன்றைய தினம் சேவாகிராமத்திற்கு வர முடிந்தது என்னுடைய அதிர்ஷ்டமே. இன்றைய நாள் மிகவும் முக்கியமானது. காரணம் இதே நாளில்தான் ஐந்தாண்டுகளுக்குமுன் பாபுஜீ நம்மை விட்டுப் பிரிந்தார். பாபுஜீ மறைந்த நாள் நான் சோவியத் ரஷ்யாவின் தலைநகராகிய மாஸ்கோவில் இருந்தேன். மாலையில் ரேடியோ நிகழ்ச்சிகள் கேட்க டில்லி ஸ்டேஷனைத் திருப்பி வைத்திருந்தேன், நிகழ்ச்சிகளுக் கிடையில் திடீரென்று "பாபுஜீ சுடப்பட்டார்" என்று ஒலிபரப்பும் அதிகாரி கூறினார். திடுக்கிட்டுப்போன நான் இவ்விஷயத்தை முதலில் நம்பவில்லை. சிறிது நேரத்திற்குப்பிறகு சீன தூதராலயத்திலிருந்து எனக்கு டெலிபோன் வந்தது. அந்த போன் செய்தி பாபுஜீயின் மறைவை ஊர்ஜிதம் செய்தது. ஆனால் நான் உடனே திரும்பி இந்தியா வர இயலவில்லை. இவ்விஷயம் என் மனதை மிகவும் வருத்தியது. அந்த வருத்தத்தை இன்று தீர்த்துக்கொண்டேன்.

இந்த சமயத்தில் நான் உங்களிடம் சில விஷயங்கள் கூற விரும்புகிறேன், அதாவது இன்றைய உலகத்தின் போக்கு மிகவும் பயங்கரமானது. ஒவ்வொரு வல்லரசும் ஆயுதப் பெருக்கத்தில் தன் முழு சக்தியையும் செலவாக்குகிறது. ஆயுத சக்தியைக் கொண்டுதான் ஒவ்வொரு நாட்டின் கௌரவமும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் பணத்திற்குத்தான் அதிக மதிப்பு கொடுக்கப்படுகிறது. இந்தப் பேராசையின் காரணமாக மகாயுத்தங்கள் நிகழ்கின்றன. நிகழ்ந்த இரு மகாயுத்தங்களின் பலனை மனிதன் மிகவும் பயத்துடன்தான் சிந்தித்துப் பார்க்கிறான். பயங்கரமான பல புதுப் பிரச்னைகளை இந்த யுத்தங்கள் உண்டாக்கினவே தவிர பழைய ஒரு பிரச்னையையும் தீர்ப்பதில் பலனடையவில்லை. நாளுக்கு நாள் மனிதன் பலமில்லாதவனாக மாறிக்கொண்டே வருகிறான். விஷயங்களை நன்கு சிந்தனை செய்து அதன்படி வேலை செய்ய ஆற்றலற்றவனாக மாறிக்கொண்டே வருகிறான். ஆகையால் ஆயுதமுள்ளவன்தான் சாதாரண மனிதனைவிட பலமுள்ளவன் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் பாபுஜீ உலக சமாதானத்திற்கு வழிகாட்டினார். யுத்தத்தின் விளைவுகளால் வெறுப்படைந்த உலகம் பாபுஜீயின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இன்று பாபுஜீயின் கொள்கைகள் பரவ ஆரம்பித்துள்ளன. இவ்விடத்தில் சேவை செய்யும் நீங்கள் பாபுஜீயின் சீடர்கள். தைரியத்தையும் மனஉறுதியையும் நீங்கள் ஒருபொழுதும் இழக்கக்கூடாது. இந்தப் புனிதமான இடம் பாபுஜீயின் கொள்கைகளை ஒலிபரப்பும் கேந்திரமாகும். அணுகுண்டு பாபுஜீயின் சித்தாந்தங்களுக்கு முன் முற்றிலும் பலமற்றதாகும், அதற்கு உலகத்தை அழிக்கத் தெரியும். ஆனால் பாபுஜீயின் கொள்கைகள் உலக சமாதானத்தை நிலை நிறுத்தும் வல்லமை வாய்ந்தவை. அந்த சித்தாந்தங்களுக்கு உயிர் கொடுப்பதுதான் உங்கள் சேவை. உங்களுக்கு எனது மனமார்ந்த ஆசிகள்!"

சேவாகிராமம்,
30—1—1954. சி. வி. பிரபாகரன்

★

## "கைராட்டை" ஹோட்டல்

[காந்திநகரில் குடியரசு தினத்தன்று "தினமணி" உதவி ஆசிரியர் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்] — ஆசிரியர்

"அணுகுண்டு யுகத்தில் உளுத்துப்போன ராட்டைக்கு உயிர்ப்பிச்சையளித்து, ஊரெல்லாம் பிச்சை யெடுத்து பிழைப்பூட்டினாலும் பிழைக்கப் போவதில்லை"—என்று பல புத்திசாலிகளும், அறிஞர்களும், நேர்முகமாகவும், மறைமுகமாகவும் நமக்கு இன்று புத்தி சொல்லி வருகிறார்கள். ஆனால்

[தொடர்ச்சி 35-ம் பக்கம் பார்க்க]

3-JAN 1956

கிராமோதயம்

பிப்ரவரி 15 1954

## செய்வோம் அல்லது மடிவோம்!!

***[இந்த ஜனவரி 30-ம் தேதி சர்வோதய தினத்தன்று மீண்டும் ஸ்ரீ விநோபாஜி கயா ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்யத் தொடங்கியுள்ளார். இம்முறை அஹிம்சா முறையில் பிரச்னையைத் தீர்க்கும் சகல விதமான நடவடிக்கைகளையும் எடுக்க தயாராகவே அங்கு செல்வதாக அவர் சங்கற்பமும் செய்து கொண்டுதான் அங்கு விஜயம் செய்கிறார். இந்த திட சங்கற்பம் அங்கு வேலை செய்துவரும் தொண்டர்கள் சூழ்நிலையின் காம்பீரியத்தையும், அதை சமாளிப்பதில் அவர்களுக்கு இருக்கவேண்டிய தீவிர முயற்சியையும் நன்கு உணரும்படி செய்துள்ளது,***

***அவர் கயா ஜில்லாவில் பூதான யக்ஞ கமிட்டியின் தலைவர் ஸ்ரீ கௌரிசரன் சிம்மருக்கு எழுதியுள்ள கடிதத்தில் "காந்தியடிகள் நமக்களித்துள்ள தாரக மந்திரம் 'செய் அல்லது செத்துமடி' என்பதே;" என்று தெரிவித்திருக்கிறார். காந்தியடிகள் அதைச் செய்து காண்பித்து சென்றுவிட்டார். ஆனால் நாம் செய்வது இன்னும் பாக்கியாக இருக்கிறது. ஆகையால் இன்று பூமிதான யக்ஞத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் இந்த புது முயற்சியை கவனிக்கிறார்கள்.***

***இந்த தீவிர முயற்சியின் அடிப்படையாக ஸ்ரீ விநோபாஜி தயாரித்துள்ள வேலைத் திட்டத்தையே தருகிறோம். இந்த அடிப்படையில் தீவிரமாக வேலை செய்தாகிலும் தமிழகத்தின் ஆற்றலையும், ஆக்க சக்தியையும் நாம் நிரூபணம் செய்ய முயற்சி செய்வோமாக.]***

— *ஆசிரியர்*

கயா ஜில்லாவில் நான் இப்பொழுது நான்காம் முறை நுழைகிறேன். இம்முறை என் சங்கற்பம் பூர்த்தியாகாமல் அங்கிருந்து நகரமாட்டேன். இதன் பொருள் மிகவும் கம்பீரமாகிவிடுகிறது. எல்லா ஊழியர்களும் இதற்கு தயாராக இருக்க வேண்டும். அந்நியோன்யமாக ஒத்துழைத்து ஒற்றுமையுடன் வேலை செய்ய வேண்டியிருக்கும். இதற்காக நான் சில யோசனைகளைக் கூறுகிறேன்.

### புள்ளிவிபரங்கள் சேர்த்தல்.

(1) எல்லாவிதமான புள்ளிவிவரங்களையும் சேகரிக்கவேண்டும். தாலூகாவாரியாகவும், கிராமவாரியாகவும் எவ்வளவு பூமி இருக்கிறது. நிலம் படைத்தவர்களிடம் இருக்கும் நிலத்தில் ஆறில் ஒரு பங்கு வீதம் எத்தனை கிடைக்கும்? அந்த கிராமத்தில் அல்லது தாலூகாவில் நிலமில்லாதோருக்கு நிலமளிக்கும் பொருட்டு எவ்வளவு நிலம் வேண்டும்? இதற்காக இதுவரை எத்தனை நிலம் சேகரிக்கப்பட்டுள்ளது? பெரிய நிலச்சுவான்தார்கள் எத்தனை பேர்கள்? முதலியன.

(2) கிராமங்களில் நிலமில்லாதோருக்கு எவ்வளவு நிலம் தேவை என்பதை தெரிந்து கொள்வதற்காக, எந்தெந்த கிராமங்களில் முதலிலேயே கொஞ்சம் விழிப்பேற்பட்டிருக்கிறதோ, எங்கு நிலதானம் சிறிதாகிலும் கிடைத்திருக்குமோ, அங்கு நிலமில்லாதோரின் ஒரு மகாநாடு அல்லது கூட்டம் கூட்டி, அவர்கள் கோரிக்கையை கிராம ஜனங்களுக்கு அறிவிக்கச்செய்யலாம். இதில் வர்க்க பேத மனோபாவனையை வளர்க்கும் பிரச்னையே இராது. ஆனால் புள்ளிவிபரங்களுடன் கிராமத்தின் பிரச்னைகளையும் கிராம ஜனங்களுக்கு அறிவுறுத்துவதுதான் நமது நோக்கம்.

### லட்சியப் பிரசார திட்டம்.

(3) ஒவ்வொரு கிராமத்திலும் "பூமிதான யக்ஞ விஹார்" (தமிழ்நாட்டில் ஆங்கில "ஹரிஜன்" ஆங்கில "ஸர்வோதயம்" தமிழ் "ஸர்வோதயம்" "கிராமோதயம்" "கிராம ராஜ்யம்" முதலிய பத்திரிகைகள்) பத்திரிகைக்கு சில சந்தாதார்கள் இருக்கும்படி சேர்த்தல், அவர்கள் இவைகளைத் தாமே படிப்பதுடன், கிராமத்தில் வாரமொரு முறையாகிலும் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி இப்பத்திரிகைகளைப் படித்துக் காட்டுவார்கள். மற்ற "சர்வோதய" பத்திரிகைகளையும், கிராமத்தில் படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

(4) தானபத்திரங்களின் எண்ணிக்கையை விரும்பத்தக்க அளவில் பூர்த்தி செய்தல்.

லட்சியத்தை நன்கு விளக்காமல் பயமுறுத்தவோ, வேறு விதமாக நிர்ப்பந்திக்கவோ முற்றிலும் கூடாது. அவ்விதம் தானபத்திரம் வாங்கப்படலாகாது. தானப்பத்திரம் வழங்கச்செய்பவரின் கையெழுத்தும் தானப்பத்திரத்தில் இருக்க வேண்டும்.

(5) பழைய தானப் பத்திரங்களில் சர்வே நம்பர், பட்டா நம்பர், எல்லைகள் முதலியன இல்லாவிட்டால் அவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். முக்கியமாக பெரிய தானப் பத்திரங்களில் இந்த விவரங்களை உடனடியாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் தானம் வாங்கிய பூமியை உடனடியாகப் பங்கீடு செய்வதில் பயன் ஏற்படும்.

(6) பெரிய நிலச்சுவான்தார்களை, அவர்களுடன் நெருங்கிய தொடர்புவைத்துள்ளவர்களும், அவர்கள் சொல்லை ஏற்கக்கூடியவர்களுமான கனவான்கள் மூலம் அணுக முயற்சி செய்ய திட்டமிடுதல். எங்கு என்னிடமிருந்து நேரில் கடிதமே தேவையாகுமென்று தோன்றினால் அவ்வாறும் கொடுக்கலாம்.

(7) எல்லா கக்ஷியினரிடமிருந்தும், கக்ஷிப் பற்றற்ற ஊழியர்களிடமிருந்தும் ஒத்துழைப்பு பெற்று, அவர்களால் சாத்தியமான அளவு வேலை பெறுதல். வேலை செய்ய இயலாதவர்களைக் கட்டாயப்படுத்தலாகாது. எல்லோர் மரியாதையும் உயரவேண்டும். எல்லோரையும் பெருந்தன்மையுடன் நடத்தவேண்டும். எல்லோரிடையேயும் சௌஜன்யமான மனப்பான்மையை ஏற்படுத்துதல். இவைகளே நமது முக்கிய விருப்பங்கள்.

(8) நான் செல்லுமிடங்களில், விசேஷ பிரமுகர்களிடம் தனித்தனியாகவும் சந்தித்துப் பேச விரும்புகிறேன். அம்மாதிரி நான் நேரில் சந்திக்க விரும்புபவர்களின் பெயர், அவர்கள் செய்துவரும் தொழில் பற்றிய விபரம் முதலியன சுருக்கமாக என்னிடம் முன்கூட்டியே கொடுத்து விடவேண்டும். இதனால் அவரைப்பற்றிய பூரண ஞானத்துடன் பேசுவது சாத்தியமாகும்,

(9) நான் செல்லுமிடங்களில் என்னுடன் சேர்ந்து ஒன்றிரண்டு டோலிகளும் வேலை செய்ய வேண்டியிருக்கும். அதேமாதிரி நான் அந்த ஸ்தலத்திலிருந்து சென்றவுடன் சூழ்நிலையின் அனுகூலத்தைப் பயன்படுத்தி வேலை செய்யும் டோலியும் வேலை செய்து வருவது அவசியம்.

(10) "கயா" நகரத்திலும், கயா சப் டிவிஷனிலுள்ள முக்கிய கிராமங்களிலும் "சம்பத்தி தான"த்தைப்பற்றி நன்கு பிரசாரம் செய்ய வேண்டும். பூமிதானம் கிடைத்த நிலத்தைப் பங்கீடு செய்யும்பொழுது சம்பத்தி தானம் இன்றி நிலப் பங்கீடு சரிவர நடைபெற முடியாது. இந்த விஷயத்தையும் தானமளிப்பவர்கள் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும்.

[தொடர்ச்சி 35-ம் பக்கம் பார்க்க]

3 - JAN 1956

## பூதானமும் கிராம கைத்தொழில்களும்

**25—12—53-ல் மதுபானியில், பூஜ்ய விநோபாஜி மகாத்மாவினல் உபதேசிக்கப்பட்ட கருத்துக்களே, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தொண்டாற்றும் நிர்மாண ஊழியர்களின் கூட்டத்தில் நிகழ்த்திய அறிவுரை]** — *ஆசிரியர்*

**விவசாயமும் கைத்தொழிலும்**

மதுபானி என்னும் கிராமம் பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு கதர் உற்பத்தி வேலையளித்து காப்பாற்றி வந்தது. அப்படியிருந்தும் இங்கு காணப்படும் மக்கள் ஒருவரின் மேலாவது கதர் ஆடை காணப்படவில்லை என்பதை நோக்க மிகவும் வருத்தமடைகிறேன். நீங்கள் அணிந்துள்ள ஆடைகள் நகர மில்களில் தயாரிக்கப்பட்ட மில் துணிகள். இந்த நிலையில் இந்தியாவிலுள்ள விவசாயிகள் கதர் ஆடையில்லாமல் சுபிக்ஷமடைவது ஒருபொழுதும் முடியாத காரியமாகும். மகான் மகாத்மா காந்தியடிகள் இந்த தத்துவத்தைத்தான் தன் வாழ்நாள் முழுவதும் வற்புறுத்தி வந்தார். இந்தியாவின் நிலைமையை அவரைவிட வேறுஎவரும் அவ்வளவு நன்கு புரிந்து கொண்டிருக்க முடியாது. நாட்டின் ஏழ்மையையும் துயரத்தையும் துடைப்பது கிராமக் கைத்தொழில்கள்தான் என்பதை சர்க்காரும் அவசியமாக உணர ஆரம்பித்து விட்டதை இன்று மக்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். கிராமங்கள் நிறைந்த இந்திய நாடு விவசாயத்தை மட்டும் நம்பி வாழமுடியாது. விவசாயமும், கிராமக்கைத்தொழில்களும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டே வாழமுடியும்; எனவே விவசாயி தன் முழு வாழ்க்கைப் பயனை அனுபவிக்க, விவசாயத்தையும், கிராமக் கைத்தொழிலையும் இரண்டையும் ஒருங்கே சேர்த்தே நம்பி வாழவேண்டும்.

ஆகையால் கிராமத்திலுள்ள மூலப்பொருள்கள் யாவையும் கிராமங்களிலேயே தேவையான பொருட்களாக கைத்தொழில்களின் மூலம் மாற்றப்படவேண்டும். பட்டணங்களுக்கு அனுப்பித்து, பின்னர் கிராமங்களுக்கு வருவது தடுக்கப்படவேண்டும் என்பதை நான் வற்புறுத்துகிறேன். கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், கிராம மக்களை பட்டணவாசிகள் சுரண்டுவதிலிருந்து காப்பாற்றுவதற்கும் இந்த ஒரே வழிதான் எனக்கு காணப்படுகிறது.

எண்ணெ, துணி, வெல்லம் முதலிய பலவிதமான வஸ்துக்கள் கிராமங்களில் மிகவும் வெகுவாக செய்யக்கூடும். இவைகளை பட்டணங்களிலிருந்து கொண்டுவருவது மக்களின் மடமையேயாகும். ஜனசங்கியை அதிகமுள்ள இந்த மாபெரும் தேசத்தை இரு கரங்களின் உழைப்பினல் செல்வமுடையதாயும் முன்னேற்றமுடையதாயும் செய்ய முடியும்.

**சுதேசி இயக்கம்:— கதர்**

இன்று நாம் சுதேசியத்தை மறந்து, வெளிநாடுகளிலிருந்து அதிகப்படியான சாமான்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். இந்த சுதேசியம்தான் நமது சுதந்திரப் போராட்டத்தில் ஊக்கமளித்துக் கொண்டிருந்தது என்பது யாரும் மறந்திருக்கமுடியாத விஷயம். சுதந்திரம் கிடைத்த பின்னர் இதை நாம் மறக்க ஆரம்பித்துவிட்டோம். இன்று தயாரித்த உடைகளும் (Readymades & used clothes) உபயோகப்படுத்தப்பட்ட உடைகளும் இறக்குமதியாவதைக்கண்டு மிகவும்வருந்துகிறேன். இந்த சகிக்க முடியாத விஷயம் உடன் நிறுத்தப்படவேண்டும்.

கிராமங்கள் சுயதேவைப் பூர்த்தியின் லக்ஷிய பாதையில் ஈடுபட வேண்டும். மூலப்பொருள்கள் அனைத்தும் கிராமங்களிலேயே தேவைப்படும் பொருட்களாக மாற்றப்படவேண்டும்; அவைகளையே மக்கள் உபயோகப்படுத்தவும் வேண்டும்.

துணி உற்பத்தி அவசியம் கிராமத்திலேதான் செய்யப்படவேண்டும். அது கிராமங்களின் உரிமையாகும். இன்று பூதானம் மட்டும் தனித்து நிற்பதில்லை. அது கதருடன் திருமணம் செய்விக்கப்படவேண்டும். பூதானமும், கிராமக் கைத்தொழில்களும் ஒன்றைவிட்டு ஒன்றை பிரிக்க முடியாதவைகள். இரண்டும் தன்னளவில் தனித்துப் பெருமையடைய முடியாது. அவைகள், ராமனும் சீதையும் எப்படியோ அப்படி இணைபிரியாதவைகள் என்று பல தடவை நான் வர்ணித்திருக்கிறேன். கதர் வாங்கி அணிவதால் அபலைகளான ஏழைமக்களுக்கு ஒருவாய் கஞ்சி வார்க்க சந்தர்ப்பம் ஏற்படுகிறதென்பதை நீங்கள் நன்கு உணர வேண்டும். இது உண்மையான தர்மம். கோவில்களில் செலவிடுவது தர்மமல்ல; இவைகளை நிறுத்தி, கதர் வாங்குவதே சத்திய தர்மம்; இதுவே கடவுளுக்கு அர்ப்பணிக்கும் உண்மையான காணிக்கை. கதர்த் தொழிலில் ஈடுபடுகிறவர்கள், நெய்வோர், நூற்போர் எட்டு மணி நேரம் வேலை செய்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றுவது உங்கள் உண்மையான தர்மமாகும்.

**கம்யூனிஸ்டுகளும், முதலாளிகளும்**

இன்று கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவத்தை வெறுக்கிறார்கள். ஆனல் முதலாளிகளின் ஆலைகளில் செய்யப்பட்ட வஸ்துக்களை ஆதரித்து அவர்களைக் கொழுக்கச் செய்கிறார்கள். அவர்களின் கொள்கைகள் ஆதாரமற்றதாகவும், முரண்பட்டதாகவும் தெரிகிறது. உண்மையில் முதலாளித்துவத்தை வெறுப்பார்களானல் அவர்களிடம் போய் சேரும் பணத்தை தடை செய்யும் மார்க்கத்தைக் கடைப்பிடித்தாக வேண்டும். கதரையே உபயோகப்படுத்தியாக வேண்டும்.

நமது நாட்டில் பல பெரியார்கள் தோன்றி அவ்வப்போது நமது மக்களுக்கு நல் வழிகாட்டி வந்து கொண்டிருக்கிறார்கள். இது நாம் செய்த பாக்கியம். ஏசுநாதரும் அவர்களில் ஒருவர்; அவர் போதித்த விஷயம் என்ன. "உன்னை நேசிப்பதைப் போல் பிறனையும் நேசி" இந்த உண்மை நாம் அறிந்ததே. ஆனல் செயலில் அதைக் கடைப்பிடிக்க மறந்து விடுகிறோம், தவறிவிடுகிறோம். இதுவே நமக்குள் பரவும் துக்கத்திற்கும், தரித்திரத்திற்கும் காரணமாகும். பூமிதானமும் இந்தக் கொள்கைக்குட்பட்டதேயாகும். பிறருக்காக நாம் நம்மிடம் அதிகம் இருப்பதை தானம் செய்யவேண்டும். பூதானத்தின் அடிப்படை கொள்கை நமது சகோதரனை முழுமனதோடு நேசிப்பதாகும். நில மில்லார்க்கு நில தானம் வழங்குவதாகும்.

— **விநோபா**

★

## சர்வோதய தினம் 30—1—54.

### டெல்லியிலும், நாட்டின் பல பாகங்களிலும்

அண்ணல் காந்தியடிகள் அமரத்துவமடைந்த நினைவுநாள் ஜனவரி 30-ந் தேதி அன்று நாடெங்கிலும், வெளிநாடுகளிலும் உரிய முறையில் அனுஷ்டிக்கப்பட்டது. நமது தலைநகரில் ராஜகாட்டில் ஜனதிபதி பாபு ராஜேந்திரபிரசாத், பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு ஆகியோரும் பிரார்த்தனை,

நூற்பு வேள்விகளில் கலந்து கொண்டு அண்ணலுக்கு அஞ்சலி செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

மற்றும் பிரதான நகரங்களிலும், கிராமங்களிலும் பிரார்த்தனையும், நூற்பு வேள்விகளும் நடத்தி, மஹாத்மாவையும் அவர் உலகிற்குக் காட்டிய வழியையும் நினைவு படுத்திக் கொண்டனர்.

### சென்னையில்

★

சென்னை தியாகராய நகர் தக்கர் பாபா வித்தியாலயத்தில் ஸர்வோதய தினம் கொண்டாடப்பட்டது. அன்று நடந்த நூற்பு வேள்வியிலும், பிரார்த்தனையிலும் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா அவர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு காந்திஜிக்கு அஞ்சலி செய்தார்கள்.

### வ. புதுப்பட்டியில்

★

30—1—54-ம் தேதி காலை 7 மணிக்கு ரேணுகா பள்ளி முன்புள்ள மைதானத்தில் பிரார்த்தனை நடைபெற்றது. இதன் பின் திரு K. V. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் 7-20 மணி முதல் 12-45 மணி வரை ஷை பள்ளிக்கூடத்திலிருந்து R. C. பள்ளிக்கூடம் போகும் பாதையில் புதிய ரோடு போடப்பட்டது. ரோட்டின் நீளம் 40 கெஜம். இந்தப் பணியில் இவ்வூர் எல்லாப் பள்ளிக்கூட ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும், சர்க்கா சங்கத் தொண்டர்களும், கதாயி மண்டல் மெம்பர்களும், பொதுஜனங்களும் சேர்ந்து சுமார் 100 பேர் கலந்து கொண்டனர். ரோடு முடிந்தவுடன் R. C. தெரு வடக்குத் தெரு முதல் செக்கடி மைதானம் வரை தெரு சுத்தம் செய்யப்பட்டது. பிற்பகல் 4-மணிக்கு ஷை ரேணுகா பள்ளி தலைமை ஆசிரியர் திரு P. சுப்பையா அவர்களால் புதிய ரோடு திறந்து வைக்கப்பட்டது.

ரேணுகா பள்ளி விளையாட்டு மைதானத்தில் மாலை 4-மணி முதல் 5-மணிவரை நூல் நூற்பு யக்ஞமும், பிரார்த்தனையும் நடைபெற்றது. நூற்பு யக்ஞத்திற்குப் பிறகு திருவாளர்கள் P. சுப்பையா, வ. வீ. சங்கரப்பன், S. A. ராமசாமி நாயுடு, வை. ராக்கப்பன், பஜனை ராமசாமி நாயுடு, S. குழந்தைஸ்வாமி, R. சுப்பா நாயுடு முதலியோர் சர்வோதய பக்ஷம் என்பது பற்றி விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். இதன் பின் தேசிய கீதம் பாட விழா இனிது முடிந்தது.

### சிதம்பரத்தில்

★

30—1—54-ல் தில்லை ஸ்ரீ நடராஜர் கோவில் ஆயிரங்கால் மண்டபத்தில் மாலை 4-மணி முதல் 5-மணி வரை நடந்த மௌன நூற்பு யக்ஞத்தில் சுமார் 800 பேர் ராட்டை—தக்ளிகளில் ஆண், பெண், மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள். பிறகு 'ராம்துன்' பிரார்த்தனையுடன் கூட்டம் கலைந்தது.

## நாமும் — கம்யூனிஸ்டுகளும்: பூமிதான யக்ஞமும்

**[சமீபத்தில் உலகிலேயே தலைசிறந்த ராஜதந்திரிகளில் ஒருவரென்று கருதப்படுபவர் ஒருவரிடம் பூமிதான யக்ஞத்தைப்பற்றி, சற்று அதிக உதவி கோரிய பொழுது அவர் எழுப்பிய பல பிரச்னைகளுக்கு, இக்கட்டுரையில் வினோபாஜி பதிலளித்திருக்கிறார். இந்த பிரச்னைகள் யார் எழுப்புகிறார்கள் என்பது பெரிதல்ல. இவைகளை கம்யூனிஸ்டுகள் எழுப்பியதற்கு பதிலளித்தே இக்கட்டுரை வரையப்பட்டது. ஆனால் அதே சந்தேகங்கள் கம்யூனிஸ்டுகளின் பரம விரோதிகளுக்கும் எழுகிறது என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. சாதாரண மனதுடைய மக்களும், இயக்கத்தில் மேலெழுந்த வாரியாக கவனம் செலுத்துபவர்களும் இக்கட்டுரையில் தமது பல சந்தேகங்களுக்கு விளக்கம் பெறுவார்கள். — ஆசிரியர்]**

### பகைமையில்லை; நட்புண்டு

எனக்கு பொதுவுடமை கக்ஷியினருடன் தொடர்பு ஏற்பட்டு சுமார் இரண்டரை வருடங்களாகிவிட்டது. அந்த கக்ஷியினரை சந்திப்பதற்கு நான் தெலுங்கானாவில் வேலை துவக்கியதுமுதல் முயன்று வந்துள்ளேன். சர்க்கார் அனுமதிபெற்று அந்தக்கக்ஷியினரை சிறையில் சந்திக்க முயன்றேன். வெகுதூரத்தில், காடுகளில்கூட அவர்கள் இருந்தனர். அங்கும் சென்று அவர்களைச் சந்திக்க முயன்றேன். அவர்கள் வேலை செய்துவந்த கிராமங்களுக்கு சென்றும் அவர்களை சந்தித்துப்பேசினேன். அப்பொழுதிருந்தே நான் அவர்களை நண்பர்களாகவே கருதுவதாகக் கூறிவந்துள்ளேன். அவர்களுடைய கருத்துக்களுக்கும், நமது எண்ணங்களுக்கும் இடையே பெருத்த வேற்றுமைகளிருந்தபொழுதிலும், நாம் அவர்களை விரோதிகளாகக் கருதவில்லை; நண்பர்களாகவே கருதுகிறோம்.

### இருவரும் ஏழைகளின் நலனை கருதுபவர்கள்

மற்றெல்லா விஷயங்களையும் விட்டுவிடுங்கள். அவர்கள் ஏழைகளின் அபிவிருத்தியைக் கோருகிறார்கள், அவர்களில் பலர் தியாகிகளுமாவார்கள். நமக்கும் ஏழைகளைப்பற்றிய கவலைதான். ஆகையால், நாம் பகைமையில்லை, நட்புண்டு என்று அவர்களிடம் கூறுகிறோம். அவர்களுடைய கொள்கைகளுக்கும், நமது கருத்துக்களுக்கும் இடையே அதிக வித்தியாசமிருக்கிறது. ஆனால் நாம் திறந்த உள்ளத்துடனிருக்கிறோம். அவர்களுடைய கொள்கைகளை எனக்கு நன்கு விளக்குவார்களாயின் நான் அவர்களுடைய கக்ஷியிலேயே அங்கத்தினராக சேரவும் எனக்கு எவ்வித சங்கோசமும் இராது.

### திறந்த உள்ளத்துடன் பிரச்னைகளை அணுக வேண்டும்

நான் இன்று ஒரு கக்ஷியிலும் அங்கத்தினரல்ல. சர்வோதய சமாஜத்தின் அங்கத்தினர் கூட அல்ல. இருப்பினும் கம்யூனிஸ்டு கக்ஷியினர் தங்கள் கொள்கைகளை எனக்கு நன்கு தெளிவாக விளக்குவார்களாயின் நான் அவர்கள் கக்ஷியில் சேரவும் தயங்கமாட்டேன். ஆனால் நாளது வரை என்னை அவர்கள் நம்பிக்கையூட்டி மனம் மாறச் செய்ய முடியவில்லை. நான் எவ்வாறு திறந்தமனதுடனிருக்கிறேனே, அவ்வாறே அவர்களும் இருப்பார்களாயின் மிகவும் நன்றாக இருக்கும். அப்பொழுது நான் எனது லக்ஷியங்களை அவர்களுக்கு விளக்க முயலுவேன்.

### புரட்சிக்கு விரோதம்

ஆரம்பத்தில் அவர்கள் பூமிதான யக்ஞத்தை தவறென்று மட்டுமல்ல, இந்த இயக்கம் அவர்களுக்கு விரோதமானது என்றும் கூறிவந்தார்கள். ஆனால் சில பொதுவுடமைவாதிகள் முன்னுக்கு வந்ததின் பயனாக, அவர்களுடைய நல்லெண்ணமும் நமக்கு கிடைத்துள்ளது பற்றி நாம் உவகை கொள்கிறோம். ஆங்காங்கு அவர்களிடமிருந்து நமக்கு வரவேற்பு பத்திரங்களும், பூமிதான பத்திரங்களும் கூட கிடைத்து வருகிறது.

### மனமாற்றம்

சமீபத்தில் பிரபல கம்யூனிஸ்டு தலைவரான ஸ்ரீ ஏ. கே. கோபாலன் பூமிதான யக்ஞத்தை பற்றி கீழ்கண்டவாறு கூறியுள்ளார்:- "நாம் பூமிதான யக்ஞத்தைப்பற்றி வினோபாஜி கொண்டுள்ள நம்பிக்கை வைக்காதிருந்த பொழுதிலும், இந்த

பிரச்னை சட்டத்தின் உதவியின்றி தீருவது சாத்தியமில்லை என்று நாம் உறுதியாக எண்ணிய பொழுதிலும், நாம் பூமிதான யக்ஞ இயக்கத்தை அரை குறையான ஒருவகை இயக்கமாக ஒப்புக் கொள்ளுகிறோம்."

**மனமாற்றம் இல்லாதவர்கள் - மார்க்ஸ்**

இம்மாதிரி ஸ்ரீ கோபாலன் கூறியிருப்பதும் ஒருவகையில் மனமாற்றமென்றே நான் கருதுகிறேன். எங்கள் மனம் மாறவே மாறாது என்று கூறுபவர்களின் மனப்போக்கு தவறானது. மனம் மாறாதென்று எண்ணுபவர்கள் ஜீவனற்ற ஒரு சாரார். ஏனெனில் மனம் மாறாதிருப்பது ஜீவனுடைமையின் லக்ஷணமல்ல. ஜடப்பொருட்கள்தான் மாறுதல்களை விரும்பாது.

**அன்றும், இன்றும் அவர்கள் கருத்து**

நான் கம்யூனிஸ்டுகளை ஜீவசக்தியுள்ளவர்கள் என்றே கருதுகிறேன் ஆகையால் அவர்களுடைய மனமும் சிறிது மாறியுள்ளது. முதலில் அவர்கள் இந்த பூமிதான இயக்கம் பயனற்றது என்று மட்டுமல்ல தவறானது என்றுகூட எண்ணினார்கள். இன்று அவர்கள் இந்த இயக்கத்தை பயனற்றதாக கருதியபொழுதிலும், தவறானதாக எண்ணவில்லை.

அவர்கள் முன்பு, இந்த இயக்கம் புரட்சியை தடைசெய்யும் இயக்கமாகவும், இறந்தவனை உயிர்ப்பிக்கும் முயற்சியாகவுமே, கருதினார்கள்: இன்று அவர்கள் இந்தவேலை தவறானதில்லை என்று கூறுகிறார்கள். நாம் இதை ஓரளவு மனமாற்றமாகவே ஒப்புக் கொள்ளுகிறோம்.

**பிரச்னை தீராது, சிக்கலாகும்**

இன்று அவர்கள் எனக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் அளித்துள்ளார்கள். அதில் ஒரு முக்கியமான வாக்கியம் கீழே தரப்படுகிறது:—

"நாங்கள் பூமிதான யக்ஞத்தின் விசேஷ அம்சங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறோம். இந்த யக்ஞத்தின் மூலம் இந்தியாவின் நிலப் பிரச்னை தீருவதற்குப் பதிலாக, மேலும் சிக்கலடையும்."

**முதலாளிகளும், கம்யூனிஸ்டுகளும் — ஒரே கருத்துடையோர்!!**

இம்மாதிரி எண்ணுவதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. இந்த உரிமை கம்யூனிஸ்டுகளுக்கு மட்டுமல்ல, முதலாளிகளுக்கும் இருக்கிறது. முதலாளிகளும், கம்யூனிஸ்டுகளைப்போல், இந்த இயக்கத்தால் நிலம் சிதறுண்டு போய்விடுமாதலால், இந்தியாவுக்கு மிக்க கெடுதல் விளையும் என்று கருதுகிறார்கள். இம்மாதிரி பல சந்தர்ப்பங்களில் இரு சாராருக்கும் ஒற்றுமை தோன்றிவிடுகிறது. இருவரும் உற்பத்தி குவியல் முறையில் ஆகவேண்டும் என்று விரும்புகின்றனர்.

**சமபங்கீடும், திறமைக்கேற்ற பங்கீடும்**

முதலாளிகள் உற்பத்தியாகும் பொருட்களை தனி நபர்களின் யோக்கியதாம்சங்களுக்கு தக்கவாறு பங்கிடு செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். கம்யூனிஸ்டுகள் சம பங்கீடு வேண்டுமென்கிறார்கள். வித்தியாசம் இவ்வளவுதான். உற்பத்தி விஷயத்தில் இருவரும் ஒன்றே!!

ஆனால் நாம் உற்பத்தி பரவல் முறையில் நடைபெற வேண்டுமென்று கூறும்பொழுது, நமக்கெதிராக இருவரும் ஒன்றுசேர்ந்து விடுகிறார்கள். கம்யூனிஸ்டுகள்தான், இந்த யக்ஞத்தில் சில குறைகளிருப்பதால் இதில் நம்பிக்கை இல்லை என்று கூறுகின்றனர்! குறைகளில்லாவிடில் அவர்கள் இதில் நம்பிக்கை கொள்ளுவார்கள் போலும்!!

**நாம் விரும்புவது**

நாம் ஏழைகளிடையே விழிப்பேற்படுவதை பலாத்காரமென்று கூறுவதாக சொல்லப்படுவது முற்றிலும் தவறு. நிலமில்லாதோர் ஒன்றுபட்டு, கட்டுப்பாடுடன் இயங்கக்கூடாது, என்று நாம் ஒரு போதும் கூறவில்லை. அவர்கள் விழிப்படையக் கூடாது என்றும் நாம் விரும்பவில்லை.

மேலும் சென்ற இரண்டு வருடங்களில், பூமிதான யக்ஞ இயக்கத்தால் இவர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்பைப்போல் வேறு ஒரு இயக்கமும் அவர்களிடையே விழிப்பேற்படுத்தவில்லை என்பதே எனது திட நம்பிக்கை.

**மார்க்ஸும் மனமாற்றத்தில் நம்பிக்கையுள்ளவர்தான்**

மார்க்ஸ் — முதலில் ஏழை, எளியோர்களின் அரசு ஏற்படும். பிறகு அரசே மாய்ந்துபோம்; அரசே இராது என்று சொன்னார். இதன் பொருள் அதிகாரங்களில்லாத ராஜாங்கம் நடைபெறும். இதை கம்யூனிஸ்டுகள் ஒப்புக்கொள்ளுவார்களேயானால், அவர்கள் மக்களிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். 'அரசாங்கம் மாய்ந்துபோம்' என்று மார்க்ஸ் கூறும்பொழுது மக்கள் யாவரும் நல்லவர்களாவார்கள், என்றே கருதப்பட வேண்டும். எனவே மக்களின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைத்தல் முறையேயாகும். அவர் இந்த கொள்கையை வகுத்தபோது இது 10 லட்சம் வருடங்களுக்கப்பால் நடக்கப்போகும் விஷயமாக எண்ணவில்லை!! அவர் அவ்வாறு எழுதுகையில், விவகார சாத்தியமான இவ்விஷயம் சிறிது காலத்தில் ஏற்படக்கூடிய விஷயமாகவே நம்பினார். ஆகையால் மக்கள் நல்லொழுக்கத்தில் நம்பிக்கை வைக்காவிடில் அரசாங்கம் என்றைக்கும் இருந்து வரும் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

**அரசாங்கம் அழிந்துபோம், ஆனால் பலமான பாட்டாளி மக்களின் யதேச்சாதிகாரம் இருந்துவரும்**

கம்யூனிஸ்டுகள் — கடைசியில் அரசாங்கம் மாய்ந்துவிடும் என்றே நம்புகின்றனர்; ஆனால் இன்று அரசாங்கம் பலம் பொருந்தியதாகவும், ஸ்திரமானதாகவும் இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர்; இதை அவர்கள் பாட்டாளி மக்களின் யதேச்சாதிகாரம் (Dictatorship of the Proletariat) என்று கூறுகிறார்கள். இன்று இம்மாதிரி யதேச்சாதிகார ராஜாங்கமாயிருப்பினும், காலக்கிரமத்தில் அது பலமிழந்துவிடும் என்று நம்புகின்றனர்.

**இன்றே ஏன் பலஹீனமடையத் தொடங்கலாகாது?**

நாமும் கடைசியில் ராஜாங்கம் மாய்ந்துபோம், என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் அதற்கு இன்றிலிருந்தே அந்த அரசாங்கம் பலஹீனமடையத் தொடங்க வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம்! அதற்காக இன்றுமுதலே அதிகாரத்தை பரவலாக பிரித்து விடுவது அவசியம். பரவல் முறையில் அதிகாரத்தை வினியோகித்தாலின்றி, அதிகாரத்தின் முடிவு ஏற்படாது!

கடைசியில் அரசாங்கம் மாய்ந்துபோக வேண்டுமென்பதில் கம்யூனிஸ்டுகளுக்கும்எனக்கும் கருத்தொற்றுமை இருக்கிறது! "மனிதன் மனதில் நல்லெண்ணம் இருக்கிறது. ஆகையால் கடைசியில் அவனுடைய நல்லொழுக்கத்தின் காரணமாகவே, அரசாங்கம் இருக்கவேண்டியிராது" என்பதிலேயே நாம் இந்த விஷயத்தில் கருத்தொற்றுமை பெற்றிருக்கிறோம்.

— ஸ்ரீ வினோபா:

3 - JAN 1956

## சர்வோதய பக்ஷ யாத்திரை

திருப்பூர் வட்டகையில் 31—1—54 முதல் 12—2—54 முடிய ஸர்வோதய பக்ஷத்தில் சர்க்கா சங்கத் தொண்டர்கள் கீழ்க்கண்டபடி கிராமங்களில் பூதானம், காந்திஜியின் கருத்துக்களைப் பரப்ப யாத்திரை செய்து வருகிறார்கள்:

| | | | கிராமங்கள்: |
|---|---|---|---|
| 1. | சென்னிமலை வட்டகை | ... | 18 |
| 2. | கொடுவாய் ,, | ... | 14 |
| 3. | காங்கயம் ,, | ... | 13 |
| 4. | ஊதியூர் ,, | ... | 14 |
| 5. | ராசிபாளையம் ,, | ... | 12 |
| 6. | பு. புளியம்பட்டி ,, | ... | 14 |
| 7. | கொடுமுடி ,, | ... | 12 |
| 8. | குண்டடம் ,, | ... | 12 |
| 9. | பல்லடம் ,, | ... | 14 |
| 10. | சிவகிரி ,, | ... | 13 |
| 11. | படியூர் ,, | ... | 13 |
| 12. | அரிக்காரன்வலசு ,, | ... | 13 |
| 13. | ஆத்தூர் ,, | ... | 8 |
| 14. | தாராபுரம் ,, | ... | 13 |
| | மொத்த கிராமங்கள் | ... | 183 |

**சஞ்சாலக், திருப்பூர் விபாக்.**

★

## சென்னைக்கு வினோபாஜி செய்தி

**[ஜனவரி 30-ம் தேதி சென்னையில் கவர்னர் தலைமையில் நடத்தப்பட்ட ஸர்வோதயதின விழாவிற்கு விசேஷமாக வினோபாஜி செய்தி அனுப்பியது இங்கு குறிப்பிடத்தக்கது. இதை மாகாணப் பொது மக்கள், அன்பர்கள் கவனத்திற்குத் தருகிறோம்.]**

— ஆசிரியர்

"நெசவாளர்கள், நூற்போர்கள், கதர் அணிபவர்கள் அங்குதான் அதிகம். கதர் உற்பத்தியும் அங்குதான் அதிகமாக நடக்கிறது. நெசவாளர்களின் துயரத்திற்கு கைராட்டை நூல்தான் முக்கியமாக பயன் தரப்போகிறது. நூல் காணிக்கையின் முக்கியத்துவத்தை சென்னை மக்கள் அறிவார்கள். ராஜ்ய மக்களின் அளவுகோலாக அமைய, அறிவில் சிறந்த சென்னை மக்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்கள் முழு கடமையை நிறைவேற்ற தயங்கமாட்டார்கள் என்பதில் ஐயமில்லை".

— **வினோபா**

## இந்திய நாகரீகமும் வேலைத்திறனும்

**[1813ம் ஆண்டில் கிழக்கிந்திய கம்பெனி விவகாரங்களில் சாட்சியம் கொடுத்துள்ள தாமஸ் மன்ரோ என்பவர் அந்நாளில் நமது நாட்டில் நிலவிய நாகரீகத்தைப் பற்றியும், வேலைத் திறமை பற்றியும் கூறியுள்ளவற்றை கீழே தருகிறோம். மேல் நாட்டு நாகரீகத்தால் சர்க்கப்பட்டு, நமது பண்டைய நாகரீகத்தையும், முன்னோர்களின் மதி நுட்பத்தையும் குறைவாக மதிப்பிடுபவர்கள் இதை சிந்திக்க வேண்டுமென விரும்புகிறோம். நாம் இவ்வாறு கூறும்போது வெறும் பழய பெருமை பேசுவதே போதுமெனவோ, காலக் கடிகாரத்தின் முள்ளை பின்னுக்குத் தள்ளிவைக்க வேண்டுமென்றோ கருதவில்லை. நமது நாகரீகம் மேலும் மேலும் வளரவேண்டும். தொழில்களில் மாந்தரின் கைத்திறன் உயரவேண்டுமென்றே விரும்புகிறோம். ஆனால் முதலில் தற்போதுள்ள நிலை 1813-ம் வருட நிலையைக் காட்டிலும் எல்லா வகையிலும் சிறந்துள்ளதா என்று ஆராய வேண்டும். அந்த அஸ்திவாரத்தின் மீதே நமது நாகரீகம் வளர வேண்டும் என்று கருதுகிறோம்.]**

— ஆசிரியர்

"விஞ்ஞானம், அரசியல், கல்வி, முதலியவைகளில் இந்தியர்களின் நாகரீகம் எப்படிப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நல்ல விவசாய முறை, ஈடில்லா உற்பத்தித்திறன், மக்களின் வசதிக்கும், ஆடம்பரத்திற்கும் தேவைப் படுவனவற்றை உண்டாக்கும் சக்தி, எழுதவும், படிக்கவும், எண்களைக் கற்கவும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பள்ளி நிறுவுதல், விருந்தோம்புதல், ஒருவர்க்கொருவர் உதவி செய்யும் தரும சிந்தனை, இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக, பெண்மக்களை பூரண நம்பிக்கையுடனும், மரியாதையுடனும், நுண்ணுணர்வுடனும் நடத்துதல் ஆகியவை நாகரீகத்தின் சின்னமென்றால், இந்தியர்கள் எந்த ஐரோப்பிய மக்களுக்கும் தாழ்ந்தவர்களல்ல. நாகரீகம் இந்த இரு நாடுகளுக்கிடையே ஒரு வியாபாரப் பொருளாகுமேயானால், நமது நாடு (இங்கிலாந்து) அதை இறக்குமதி செய்வதின் மூலம் லாபம் அடையும் என்று நான் நன்கு அறிந்திருக்கிறேன்."

"அம்மக்களின் மத சமூக வழக்கங்களும், அதற்கும் மேலாக அவர்களின் சொந்த தயாரிப்பின் சிறப்புமே பிரிட்டிஷ் சரக்குகள் விற்பனையை இந்தியாவில் பாதிக்கிறதோ என நான் அஞ்சுகிறேன். நான் ஒரு இந்திய சால்வையை ஏழு வருடமாக உபயோகித்து வருகிறேன். அது புதுக் கருக்கு மறையாமல் வாங்கிய போதிருந்த மாதிரியே இருக்கிறது. இதைப்போல இங்கிலாந்தில் தயாரிக்கப்படும் சால்வைகள் இனமாகக்கொடுத்தால் கூட உபயோகிக்கக்கூடியதாக நான் பார்க்கவில்லை."

— **கே. எஸ். நடராஜன்**

## தமிழ் நாட்டில் பூமிதான இயக்கம்,

சென்ற 31—1—54-ல் தஞ்சை ஜில்லா வேதாரண்ய குருகுலத்தில் தமிழ் நாடு பூமிதான ஊழியர்கள் கூட்டம் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்றது. சமீபத்தில் தஞ்சையில் யாத்திரை செய்த ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் "இனி எப்படி பூமிதான இயக்கம் வெற்றியடையவும் துரிதப்படுத்தவும் லக்ஷிய எல்லையை அடையபாடுபடவேண்டுமென்றும், அரசியல் கட்சிகள் இதற்கு எவ்விதம் உதவி செய்யமுடியுமென்றும், தலைமைதாங்கி நடத்துவது நிர்மாண ஊழியர்களால் தான் முடியும் என்றும் கூறினார்". அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் 29 ஏக்கர் நிலம் தானம் கிடைத்தது.

சம்பத் தானமாக ரூ. 979—1—10 ரொக்கமும், ஏர், கலப்பை, மாடுகளும் கிடைத்தன.

ஜனவரி 31-ந்தேதி வரை தமிழ் நாட்டில் மொத்தம் 20,184—97 ஏக்கர் நிலம் பூமிதானமாக கிடைத்திருக்கிறது.

— **ப. கோவிந்தசாமி**

இவ் வருடத்திற்கு வினோபாஜியால் நிர்ணயிக்கப்பட்ட லக்ஷ்ய அளவு 25 லட்சம் ஏக்கர் பூர்த்தியாகிவிட்டது. ஜனவரி 10-உ வரை தேசம் பூராவிலும் 29,07,023 ஏக்கர் நிலம் பூதானமாக கிடைத்துள்ளது.

இதில் பீஹார் மட்டும் 18,23,000 ஏக்கர் வழங்கி தலைமை தாங்கி வழிகாட்டியுள்ளது.

நாளது வரை 6 ராஜ்யங்களில் மொத்தம் 40,545 ஏக்கர் நிலமில்லாதவர்களுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ் நாட்டில் 295 ஏக்கர் வரை விநியோகமாகியுள்ளது.

[30-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

(11) சில கிணறுகள் வெட்டுவதற்கும் பணம் சேர்ந்துள்ளது. சில வேலைகளுக்கு மேலும் உற்சாகமளிக்கும் பொருட்டு எங்கெல்லாம் கிணறு வெட்டவேண்டும் என்பதற்கும் திட்டம் வகுக்க வேண்டும்.

**முகாம் நடத்தல்.**

(12) ஆங்காங்கு சிறு சிறு முகாம்கள் நடத்த வேண்டும். முகாம்கள் இம்மாதிரி 3 நாட்களுக்கு மேல் அதிகம் நீளலாகாது. முகாம் முடிந்ததும் தொண்டர்களை உடன் பிரத்தியக்ஷ வேலையில் ஈடுபடுத்தவேண்டும். ஊழியர்கள், தங்கள் சக்திக்கேற்றவாறு, சர்வோதயப் பிரசுரங்கள் விற்பனை, லட்சியப் பிரசாரம் செய்தல், பூமிதான யக்ஞ செய்தியை மக்களிடம் பரப்புதல், தானப் பத்திரங்களில் சர்வே நம்பர், பட்டா நம்பர் முதலிய விபரங்களைப் பூர்த்தி செய்வித்தல், வேறு வேலைகளுக்கான ஏற்பாடுகள் செய்தல் முதலிய பல வேலைகளில் ஈடுபடுத்தலாம். பூமிதானம் பெறும் வேலையோ இருக்கவே இருக்கிறதே!

**கிராமங்களில் கதர் உற்பத்தி ஆரம்பித்தல்**

(13) எல்லாத் தாலூக்காக்களிலும் கதர் வேலை செய்யும் சென்டர்கள் சீக்கிரமே ஆரம்பிக்கப்படவேண்டும். பூமிதான யக்ஞப் பிரசாரத்திற்காக கதர் சென்டர்களிடம் நான் அதிகமாக எதையும் எதிர்பார்க்கவில்லை, ஆனால் பூமிதான யக்ஞமும், கதர் கிராமக் கைத்தொழில்களும், ஓரே சமக்ர யோசனைகளின் இரண்டு பகுதிகளே யாதலால், கதர் சென்டர்கள் ஆரம்பிக்கப்படுவதால், நமக்கு சகஜமாகவே ஜனங்கள் ஆதரவும், உதவியும் பெருகவே செய்யும். கதருடன் கூட சர்வோதய நூல்கள் (பிரசுரங்கள்) எளிதில் கிராமங்களில் பரப்ப முடியும்; பரப்பப்படவேண்டும்.

(14) ஸ்திரீகள் சக்தியை விசேஷ முறையில் உபயோகப்படுத்த வேண்டும். அவர்களுடைய கார்ய சக்தியைத் தூண்டிவிட்டு. விழிப்படையச் செய்வது ஒரு தனி வேலையே ஆகிவிடும். அது பூதான யக்ஞத்திற்காக மிகவும் அவசியம்.

(15) மாணவர்கள், ஆசிரியர்கள் மூலம் விசேஷமாக சர்வோதய புத்தக, பத்திரிகைகள் விற்பனை சுலபமாக சாத்தியமாகும். இம்மாதிரி நூல்களைப் படிப்பதற்காக அவர்களிடையே ஆராய்ச்சிக் கழகங்களும் ஆரம்பிக்கப்படலாம்.

பொதுஜன நலனுக்காக நடத்தப்படும் இயக்கங்களில் எழுத்தாளர்களின் பங்கும் விசேஷமானது. அவர்களுடைய அனுதாபத்தையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்கு விசேஷ முயற்சி செய்யப்படவேண்டும். அவர்களுடைய ஊக்க சக்திகளுக்கு ("கிராமோதயம்" "சர்வோதயம்" "கிராம ராஜ்யம்") "பூமிதான யக்ஞ விஹார்" பத்திரிகையில் விசேஷ இடம் கிடைக்கும்.

(16) வியாபாரிகள், வக்கீல்கள், டாக்டர்கள் முதலிய வெவ்வேறு வகுப்பினரிடையே நுழைந்து வேலை செய்வதற்கான திட்டமும் வகுக்கப்பட வேண்டும்.

(17) பூமிதான யக்ஞ இயக்கத்தில் அடங்கியிருக்கும் அமைதி நிறைந்த புரட்சியை மக்களை உணரும்படிச் செய்து, அதற்காகவே தமது பெரும் பகுதி நேரத்தையும், சிந்தனையையும் செலுத்துவதாக உறுதிகொண்டுள்ள ஊழியர்களின் ஒரு படை தயாரிக்க வேண்டும். இம்மாதிரியிருக்கும் சகோதரர்களுடன் நான் சந்தித்துப் பேச விரும்புகிறேன் அவர்களுக்காக பயிற்சித் திட்டமும் வகுக்கப்படவேண்டும்.

(18) தொண்டர்கள், எவரையும் குறை கூறவோ, யாருடைய குறைகளைப்பற்றியும் சர்ச்சை செய்யவோ கூடாது என்ற விரதம் மேற்கொள்ள வேண்டும். காரியாலயத்தில் எல்லா வேலைகளும் திட்டமிட்டவாறு நடைபெற வேண்டும். கடிதங்களுக்கு பதில் உடனுக்குடன் அனுப்பப்படவேண்டும். பிரார்த்தனை இயந்திரவேலைபோல் ஆகிவிடக் கூடாது. "மங்களபிரபாதம்" "கீதைப்பேருரைகள்" "ஸ்திதபிரக்ஞதர்சன்" "ஈசோபனிஷத்" முதலிய நூல்களை படித்து பாராயணம் செய்வதும், தொண்டர்களின் பிரார்த்தனையில் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும்.

இம்மாதிரி எனது சில யோசனைகளை கூறினேன். இவைகளை பூர்த்தி செய்வதற்கு காரிய நிர்வாகிகளுக்கு மேலும் பல யோசனைகள் தோன்றும். அவர்கள் அவை யாவும் செய்ய வேண்டும். "செய்வோம் அல்லது செத்து மடிவோம்" என்ற சங்கற்பத்தை நமக்கு காந்தியடிகள் தந்தார். அவர் அதை பூர்த்தி செய்து சென்றுவிட்டார். நாம் அவ்வாறு செய்வது பாக்கி. இதை உணர்ந்து நாம் நமது காரிய சக்தி அனைத்தையும் இவ்வேலையில் ஈடுபடுத்த வேண்டும். — **ஸ்ரீ வினோபா.**

[29-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

இந்த கைராட்டைத் தொழில் இன்று காந்தியடிகள் அதைப் பேணி வளர்த்ததின் பயனுக, நமது தேசத்தில் மட்டுமல்ல, இயந்திர யுகத்தின் பிறந்தகமாகிய இங்கிலாந்திலும் இன்று நடைபெற்றுவருகிறது என்று நான் கூறவிரும்புகிறேன்.

ஆங்கில பாஷையின் காளிதாஸனும், கம்பனுமாக போற்றப்பெறும் ஷேக்ஸ்பியரின் பிறந்தகமாகிய ஸ்ட்ராட்போர்டு ஆன் ஆவனுக்கு (Stratford-on-Avon) நான் சென்றிருந்தபொழுது "கைராட்டை" (Spinning wheel) என்ற பெயருடன் நடத்தப்படும் ஒரு ஹோட்டலிலே தங்கினேன். அந்த ஹோட்டலை நடத்திவந்த அம்மையார் சிறந்த நூல் நூற்று வருகிறார் என்பது மட்டுமல்ல, மற்றும் சுமார் 100 பெண்மணிகள் அங்கு கையினால் நூற்று துணி நெய்கிறார்கள் என்பதைப் பார்த்தேன். இம்மாதிரி தயாரிக்கப்படும் ("Tweed") ட்வீடு, (Worsted) வோர்ஸ்டட் முதலிய பலரக துணிகளுக்கும் இங்கிலாந்தில் மட்டுமல்ல, அமெரிக்கா போன்ற நாகரிக உலகத்தின் தலைசிறந்த நாடுகளிலும்கூட, கிராக்கி இருந்துவருகிறது.

ஆகையால் சென்ற 30 ஆண்டுகளாக பல கஷ்டங்களுக்கும் இடையே இந்த கைராட்டைத் தொழிலை வளர்ச்சியடையச் செய்துள்ள உங்களுக்கு, வரும் சில வருடங்களில் நிரந்தரமான பொருளாதார பாதுகாப்புகளும், உதவிகளும் நமது தேசிய சர்க்கார் அளிக்க முன்வரும் என்று பெரிதும் நம்புகிறேன்.

காந்திநகர், திருப்பூர்.
30—1—'54.

**ஏ. ஜி. வெங்கடாசாரி,**
"தினமணி" துணை ஆசிரியர்.

★

## 'எளிமையை விரும்புகிறோம்; ஏழ்மையையல்ல!'

"இன்று இங்கு அகில இந்தியாவிலும் ஆங்காங்கு விவசாய வேலைகளுக்காக ஈடுபடுத்தப்படும் பல்வேறு கருவிகளின் மாதிரிகளும், அவற்றில் ஆராய்ச்சிகளின் பயனுக ஏற்படுத்தப்பட்டுள்ள சீர்திருந்திய மாதிரிகளும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன. விஞ்ஞான யுகத்தில் இருந்த பழைய மாமூல் முறையில் மனித சக்தியாலும், கால்நடைகளாலும் இயக்கக்கூடிய கருவிகளின் ஒரு கண்காட்சி எதற்காக நடத்தப்படவேண்டும்?

3-JAN 1956

இதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது என்று பல நண்பர்கள் நினைக்கக்கூடும். உலகிலேயே இன்று ஏக்கருக்கு சராசரி உற்பத்தி மிகக் குறைவான நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவின் உணவுப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமானால், விவசாயத்தை இயந்திரமயமாக்கினாலன்றி சாத்தியமில்லை என்றும் பலர் எண்ணுகின்றனர். ஆனால் இந்த கேள்விகளுக்கெல்லாம் "விஞ்ஞானம்" என்பதற்கு "பெரிய இயந்திரங்கள்" என்றும் "சிறிய கருவிகளில்" விஞ்ஞானம் இல்லை என்றும் எண்ணும் நமது மனோநிலைதான் காரணம்."

"நமது ராட்டையும், தக்ளியும் சிறு இயந்திரங்களே; கையினால் பஞ்சு இழுத்து, முறுக்கேற்ற உதவும் உபகரணம் - தக்ளி. அதைச் சீர்திருத்தி மேன்மை அடைந்ததுதான் கைராட்டை. இன்று உலகிலேயே மிகப் பெரிய நிலப்பரப்பில் இவ்வளவு சாதாரண உபகரணங்களைக்கொண்டு, இவ்வளவு அதிகமான அளவு விவசாயம் செய்யும் வேறு தேசம் இல்லை. இந்த உபகரணங்களிலேயே விஞ்ஞான ரீதியில் சிறிது அனுகூலமான மாறுதல்கள் செய்தால் போதிய நன்மைகள் கிட்டும் என்பதை இந்த கண்காட்சியைப் பார்வையிட்டாலே நன்கு தெரியும். நாம் எளிமையை விரும்பும்பொழுது ஏழைமையை விரும்பவில்லை. ஆகையால் எளிய உபகரணங்களைக்கொண்டு, விவசாயிகளுக்கு அதிக பயன் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே இந்த முயற்சிகள் செய்து வருகிறோம். இந்த சிறப்புகளை நன்கு உணர்ந்து, தனது இயற்கையான ஆற்றலோடு, தேசமெங்குமுள்ள விவசாயிகளுக்கு பயன்படும்படி செய்வதற்கு இந்திய சர்க்காரின் உணவு மந்திரி ஸ்ரீ ரபி அஹமத் கித்வாய் அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார் என்று நம்புகிறேன்.

மகன்வாடி,
2—2—1954 } ஸ்ரீ சங்கர்ராவ் தேவ்.

## முயற்சியால் நாம் பிறருக்கும் உதவலாம்!

*[அகில பாரத விவசாயக் கருவிகள் சீர்திருத்த மகாநாடு, சர்வ சேவா சங்கத்தின் சார்பில், இந்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ ரபி அஹமத் கித்வாய் அவர்கள் முன்னிலையில் கூடிற்று. அது சமயம் நடந்த ஒரு கண்காட்சியைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டு நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் சாரமிது]*

— ஆசிரியர்

"சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு நம் தேசம் உணவுப்பற்றுக்குறை காரணமாக மிகவும் கஷ்டப்பட்டுள்ளது. நமது தேசவிடுதலைக்குப் பிறகு சென்ற ஏழுவருடத்தில் நாம் வெளிநாடுகளிலிருந்து சுமார் 950 கோடி ரூபாய்க்கு உணவுத் தானியங்கள் இறக்குமதி செய்துள்ளோம். சென்ற வருடம் தேசமெங்கும் பருவமழை நன்றாகப் பொழிந்ததின் பயனாகவும், ஆங்காங்கு பூர்த்தியாகியுள்ளதும், பூர்த்தியாகி வருவதுமான நீர்ப்பாசனவசதி திட்டங்களின் உதவியாலும் இந்த வருடம் நமக்கு வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருள் இறக்குமதி செய்ய வேண்டியிராது."

"இந்த நிலை மேனாட்டுமுறைகளைப் பின்பற்றி விவசாயத்தை மிக்க அதிகம் இயந்திரமயமாக்கியிருப்பதனால்தான் ஏற்பட்டுள்ளதென்று சொல்வதற்கில்லை. நமது பழங்கால முறைகளையும், கருவிகளையும் பயன்படுத்தியே நமது உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். அம்மாதிரிக் கருவிகளிலும், முறைகளிலும் போதிய கவனம் செலுத்தி, உங்கள் முயற்சியின் பயனாக சீர்திருத்தமும், அபிவிருத்தியும் ஏற்படுமேயானால், நமது உணவுப்பற்றுக்குறை தீருவதற்கு மட்டுமின்றி, உலகிலுள்ள இதர பின் தங்கிய நமது அண்டை நாடுகளுக்கும் நாம் உணவுப்பொருட்களை அனுப்பி உதவும்படியான ஒரு நிலைமையை வெகு சீக்கிரம் ஏற்படுத்த உதவியவர்களாவோம்!"

மகன்வாடி,
2—2—1954. } ஸ்ரீ ரபி. அகமத் கித்வாய்,
(மத்திய அரசாங்க உணவு மந்திரி.)

## பொங்கல் சர்வோதய பக்ஷ கமிஷன் விளக்கம்.

*[பொங்கல் சர்வோதய பக்ஷக் கமிஷன் ஏன் ஒரு மாகாணத்தில் மட்டும் கொடுக்கப்பட்டதென்று பல நண்பர்களும், இந்த விசேஷ கமிஷன் ஏன் கதர்போர்டு கொடுக்கிறது? என்று சில நண்பர்களும் சர்வ சேவா சங்கம், சேவாகிராம காரியாலயத்திற்கு எழுதியதற்கு, சர்வ சேவா சங்கக் காரியதரிசியின் விளக்கத்தை, கதர் அன்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் கீழே தருகிறோம். இவைகள் சந்தேகங்களை அகற்றுமென நம்புகிறோம்]*

— ஆசிரியர்

இவ்வாண்டு பெரிய ஸ்தாபனங்களுக்கும், சர்க்கார் இலாக்காக்களுக்கும் தேவையானதை மொத்தமாக உற்பத்தி செய்து விற்றதில், ஏற்பட்ட உற்பத்தி செலவின் மிருதியை, இவ்வளவு வேலையும் நடந்த தமிழ் நாட்டிற்கே (கதர் அன்பர்களுக்கு) திரும்பக்கொடுக்க சர்வ சேவா சங்கம் முடிவு செய்து, காந்தியடிகளின் புண்ய திதியும், சர்வோதய பக்ஷமும், தமிழ்ப் பெருநாளான தைப் பொங்கலும் ஒருங்கே சேர்ந்து வரும் தை மாதத்தில் 'விசேஷ கமிஷன்' தமிழ் நாட்டில் கதர் அன்பர்களுக்குக் கொடுக்க அனுமதிக்கப்பட்டது. இதில் வேறு எந்தவித நோக்கமும், சலுகையுமில்லை.

1. விசேஷ கமிஷன் தமிழ் நாட்டுக் கிளைகளில் மட்டும் கொடுக்கப்பட்டது.
2. இந்தக் கமிஷன் சர்க்கார் கதர் போர்டாரால் கொடுக்கப்படவில்லை.
3. இவைகளை சர்வ சேவா சங்கம்தான் ஏற்றுக் கொள்கிறது.
4. மேற்படி கமிஷன் 12—2—54-ந் தேதியுடன் நிறுத்தப்பட்டு விட்டது.

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

## இந்த இதழில்

உலகம் உங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறது — சி. வி. பிரபாகரன் 29
பூதானமும் கிராமக் கைத்தொழில்களும் — வினோபா 31
சர்வோதய தினம் 30—1—54 31
நாமும் - கம்யூனிஸ்டுகளும்: பூமிதான யக்ஞமும் — வினோபா 32
சென்னைக்கு வினோபாஜி செய்தி 34
இந்திய நாகரிகமும் வேலைத்திறனும் — கே. எஸ். நடராஜன் 34
தமிழ் நாட்டில் பூமிதான இயக்கம் 34
எளிமையை விரும்புகிறோம்; ஏழ்மையை அல்ல — ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் 35
முயற்சியால் நாம் பிறருக்கும் உதவலாம் — ஸ்ரீ ரபி அகமத் கித்வாய் 36
பொங்கல் சர்வோதயபக்ஷ கமிஷன் விளக்கம் 36

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.